தினமணி

**கன மழை: நூற்றுக்கணக்கான ஏக்கர் சம்பா சாகுபடி பாதிப்பு**

First Published : 29 Oct 2011 04:34:04 AM IST



மழையால் பாதிக்கப்பட்ட சம்பா நடவு நெல் வயல்.

புதுச்சேரி, அக். 28: புதுச்சேரியில் பெய்த கனமழை காரணமாக, பாகூர் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சம்பா நடவு பாதிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து தற்போது மறு நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

÷ஐப்பசி மாதத்துக்குள் சம்பா நடவு செய்தால்தான் நெல் கதிர் வரும்போது பனி பொழிவில் இருந்து தப்பிக்க முடியும். இல்லையென்றால் பனி பொழிவில் சிக்கி கறுப்பு நெற் கதிராக மாறிவிடும் என்று விவசாயிகள் கூறுகின்றனர். அதனால் கடந்த 15 நாள்களாக பாகூர் பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் சம்பா பருவத்துக்கான நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.

÷இந்நிலையில் கடந்த சில நாள்களாகப் பெய்த கன மழையில் வெள்ளம் சூழ்ந்து நடவு செய்யப்பட்ட நெல் பயிர்கள் மூழ்கியுள்ளன. இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மழை நீர் வடியத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் நடவு செய்யப்பட்ட பயிர்கள் அழுகியுள்ளன. ÷அது போன்ற வயல்களில் மீ0ண்டும் மறு நடவு செய்யும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இன்னும் கொஞ்சம் நாள் இடைவெளிவிட்டு மறு நடவு செய்யலாமே என்று கேட்டதற்கு, ஐப்பசி மாதத்துக்குள் சம்பா நெல் நடவு செய்தால்தான்

நெல் கதிர்கள் கறுப்பாக வராமல் இருக்கும் என்று விவசாயிகள் கூறுகின்றனர்.

÷மழை பாதிப்பு குறித்து பாகூர் பகுதியைச் சேர்ந்த விவசாயி சோமநாதன் கூறியது:
எங்கள் பகுதியில் மழையால் 300-க்கும் மேற்பட்ட ஏக்கர் சம்பா நடவு பாதிக்கப்பட்டுள்ளது. இப்போது உரங்களின் விலையும் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகளுக்கு அதிகச் செலவு ஏற்பட்டு வருகிறது. இப்படி சிரமப்பட்டு நெல் சாகுபடி செய்தாலும் விளையும் போது நெல்லுக்கு உரிய விலை கிடைப்பதில்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குறைந்த விலைக்குதான் நெல் கொள்முதல் செய்கின்றனர்.
÷வடிகால்கள் தூர் வாரப்படவில்லை. இதனால் கனமழையின் போது அதிக அளவில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆண்டுதோறும் மழைக்காலத்துக்கு முன்பு வடிகால்கள் தூர் வாரப்பட்டால் இந்த நிலை இருக்காது என்றார்.
இப்பகுதியில் பல்வேறு நிலங்களுக்குப் பாசனப் பணியில் ஈடுபட்டு வரும் நாராயணசாமி கூறுகையில், வடிகால்களை சரியாக தூர் வாரினால் இந்த அளவுக்குப் பிரச்னை வராது. அதனால்தான் மழை நீர் வெள்ளமாகச் சூழ்ந்து விடுகிறது. மழை காலத்துக்கு முன்பாக வடிகால்களைத் தூர்வார வேண்டும் என்றார்.
நடவு பணியில் ஈடுபட்டிருந்த விவசாயத் தொழிலாளி குப்பு கூறியது:
கட்டடத் தொழிலாளர் சங்கத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கு தீபாவளிக்காக ரூ.500 பரிசு கூப்பன் கொடுத்துள்ளனர். நாங்கள் விவசாய சங்கத்தில் பதிவு செய்திருக்கிறோம். எங்களுக்கு எந்தச் சலுகையும் கிடையாது.
÷மழை பெய்தால் எங்களுக்கு வேலை கிடைப்பதில்லை. அரசின் இலவச அரிசியும் சரியாகக் கொடுக்கவில்லை. இதைத் தவிர எங்களுக்கு 100 நாள் வேலை திட்டம் கொடுப்பதாகக் கூறி அதற்கான வேலை அட்டை கொடுத்தார்கள். இதில் 25 நாள்கள்கூட வேலை கொடுக்கவில்லை.
÷அதனால் மழைக்காலத்தில் செலவுக்குப் பணம் இல்லாமல் அவதிப்பட்டு வருகிறோம். எங்களின் நிலையை அரசு உணர்ந்து எங்களுக்கு வேலை கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.
நடவு பணியில் ஈடுபட்டிருந்த மற்றொரு விவசாயக் கூலித் தொழிலாளி கலைவாணி கூறுகையில், மழை பெய்தால் எங்களுக்கு வேலை கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. அது போன்ற நாள்களில் எங்களின் அன்றாடச் செலவுகளுக்குப் பணம் இல்லாமல் அவதிப்பட்டு வருகிறோம் என்றார்.

**புதிய புயல் சின்னம்: தமிழகத்தில் மழை தொடரும்**

First Published : 29 Oct 2011 04:14:02 AM IST

சென்னை, அக். 28: வங்கக் கடலில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தின் பெரும்பாலான இடங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் ரமணன் செய்தியாளர்களிடம் வெள்ளிக்கிழமை கூறியது:-

தமிழகம், புதுவையில் கடந்த 24 மணி நேரத்தில் பல்வேறு பகுதிகளில் அதிக அளவு மழை பெய்துள்ளது. மன்னார்வளைகுடா - ஆந்திர மாநிலத்தை ஒட்டியுள்ள மத்திய மேற்கு வங்காள விரிகுடாவில் கடந்த சில தினங்களாக நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மறைந்துவிட்டது.

இப்போது இலங்கை முதல் மத்திய மேற்கு ஆந்திராவை ஒட்டியுள்ள வங்காள விரிகுடாவில் புதிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இதனால் தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 24 மணி நேரத்துக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. இந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இலங்கையில் இருந்து மன்னார் வளைகுடாவுக்கு நகரும் நிலையில் கன மழை பெய்யக்கூடும் என்றார் ரமணன். தமிழகத்தில் கடந்த 24-ம் தேதி வடகிழக்குப் பருவமழை தொடங்கியது. இதனால் புதன், வியாழன் ஆகிய இரண்டு தினங்கள் பரவலாக மழை பெய்தது. எனினும் சென்னை உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ளிக்கிழமை வெயில் அடித்தது.

தமிழகத்தில் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக உத்தமபாளையத்தில் 90 மில்லி மீட்டரும், ஜெயங்கொண்டத்தில் 80 மில்லி மீட்டரும் மழை பதிவானது. மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்):- மணிமுத்தாறு, குளச்சல் 60, மதுரை மாவட்டம் திருமங்கலம், கள்ளக்குறிச்சி, ராமேஸ்வரம், கூடலூர் 40, சீர்காழி, பாம்பன், திருச்செந்தூர், பூதபாண்டி, தர்மபுரி, பெண்ணாகரம், பவானி, சத்தியமங்கலம், குன்னூர், வத்திராயிருப்பு 30, விருத்தாசலம், காரைக்கால், வேதாரண்யம், செங்கோட்டை, தென்காசி, திருநெல்வேலி, பேச்சிப்பாறை, குமாரபாளையம், ஏற்காடு, கோபிசெட்டிப்பாளையம், மணப்பாறை, சோழவந்தான், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, ஆண்டிபட்டி, அருப்புக்கோட்டை, சிவகாசி, கொடைக்கானல் 20, செங்கல்பட்டு, மாமல்லபுரம், பொன்னேரி, செங்குன்றம், சிதம்பரம், காட்டுமன்னார்கோவில், கும்பகோணம், திருவாரூர், மயிலாடுதுறை, ஆரணி, வேலூர், திருச்செங்கோடு, மேட்டூர் அணை, கோவை, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, திருச்சி, மதுரை, தேனி, போடிநாயக்கனூர், பழநி, வேடசந்தூர் 10.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மழையால் அழுகின சாமந்தி பூக்கள் சோகத்தின் விளிம்பில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,01:23 IST

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை அருகே தொடர் மழையால் சாமந்தி பூக்கள் அழுகி விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்த கிளியூர், எம்.குன்னத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் பூச் செடிகள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. இப்பகுதியில் அறுவடை செய்யப்படும் பூக்கள் உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம், திருவண்ணாமலை பகுதிகளுக்கு விற்பனைகாக அனுப்பி வைக்கப்படுகின்றன. ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் சாமந்தி பூ அதிகளவில் உற்பத்தியாகும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.தற்பொழுது பெய்து வரும் தொடர் மழையால் சாமந்தி பூக்கள் அழுகி வீணாகி உள்ளன. இதனால் பூக்களின் மகசூல் பாதிப்பு ஏற்பட்டு, விவசாயிகளை பெரும் சோகத்தில் ஆழ்த்தியள்ளது.அதே நேரத்தில் மழை மற்றும் தீபாவளி பண்டிகையால் முல்லை ஒரு கிலோ 150 முதல் 450 ரூபாய் வரையும், காக்காட்டன் பூ கிலோ 40 முதல் 200 ரூபாய், கனகாம்பரம் 100, சாமந்தி 10 முதல் 40 ரூபாய் வரையும் விற்பனை செய்யப்பட்டது. இந்த விலை உயர்வு வியாபாரிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தினாலும் பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. மழை மற்றும் பூக்களின் அறுவடை குறைவால் விலை உயர்ந்ததாக விவசாயிகள் தரப்பில் தெரிவித்தனர்

**சூரியகாந்தி விதைகளை விற்க வேளாண்துறை அறிவுறுத்தல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,00:22 IST

தர்மபுரி: சூரியகாந்தி விதைகளுக்கு சந்தையில் விலை குறைந்து வருவதால், விதைகளை உடனே விற்பனை செய்யுமாறு வேளாண் துறை விவசாயிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இது குறித்து வேளாண்மை துணை இயக்குனர் (வணிகம்) நாகராஜன் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் விவசாயிகள் அறுவடை செய்த சூரியகாந்தி விதையை சந்தையில் மாறுபடும் விலையேற்றத்துக்கு தகுந்தாற்போல், எப்போது விற்பனை செய்யலாம் என்ற யோசனையில்

உள்ளனர். மேலும், சந்தை நிலவரங்கள் குறித்து தெரிந்துகொள்ள ஆவலாக உள்ளனர். சந்தைப்படுத்துவதலில் முக்கிய முடிவுகளை விவசாயிகள் மேற்கொள்ளவதற்காக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் ஆலோசனை வழங்கியுள்ளது. இந்த மையத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கடந்த 11 ஆண்டுகளாக, நிலவிய சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராய்ந்தது.

இதில், சூரியகாந்தி விதை ஒரு கிலோவுக்கு, 27.30 ரூபாய் இருக்கலாம் என தெரியவந்துள்ளன. 100 மில்லி லிட்டர் அளவில், 40 முதல் 42 கிராம் எடையுள்ள விதைகளுக்கு அதிக விலை கிடைக்கும். விதையின் எடையை பொருத்து விலையில் மாற்றமிருக்கும். இனிவரும் நாட்களில் சந்தையில் விலையேற்றத்துக்கு குறைந்த வாய்ப்பே உள்ளது. அதனால், தர்மபுரி மாவட்டத்தில் சூரியகாந்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் சூரியகாந்தி விதைகளை உடனே விற்பனை செய்ய வேண்டும்.இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

**சொட்டுநீர் பாசன பயிற்சி விவசாயிகளுக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,00:07 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வேளாண் பொறியியல் துறை சார்பில், சொட்டு நீர் பாசனம் குறித்து நடத்தப்படும் பயிற்சியில் சேர விரும்பும் விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

வேளான் பொறியியல் துறை செயற்பொறியாளர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் பொறியியல் துறையின் சார்பில், விவசாயிகளுக்கு சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் நீர் சேமிக்கும் பாசன கருவிகள் மூலம் நீர் மேலாண்மை பயிற்சி, பயிர் பாதுகாப்பு கருவிகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பயிற்சி ஆகிய இரு பயிற்சிகள், கிருஷ்ணகிரியில் நடத்தப்படுகிறது. சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மறறும் நீர் சேமிக்கும் பாசன கருவிகள் மூலம் நீர் மேலாண் பயிற்சி, ஓசூரில் நடக்கிறது. ஒரு வாரம் அளிக்கப்படவுள்ள இந்த பயிற்சியில் சேர விரும்பும் விவசாயிகள், 18 வயதுக்கு மேலும், 40 வயதுக்கு உட்பட்டும் இருக்க வேண்டும்.

பயிற்சியின்போது, பயிற்சியாளர்களுக்கு ஒரு வாரத்துக்கு உதவி தொகையும், விதிமுறைகளுக்கு ஏற்ப பயணப்படி மற்றும் உணவுக்கான தொகையும் வழங்கப்படும். பயிற்சியில் சேர விரும்பும், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை மற்றும் போச்சம்பள்ளி தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியில் துறை, 43, செட்டியம்பட்டி ரோடு, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி' என்ற முகவரியிலும், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை ரோடு, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் நேரில் அனுகி விண்ணப்பங்களை வழங்கலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வெற்றிலை விலை உயர்வு கரூர் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,00:19 IST

வேலாயுதம்பாளையம்: திருமணம் உள்ளிட்ட சுப காரியங்கள் துவங்கியுள்ளதால் வெற்றிலைக்கு விலை அதிகரித்துள்ளது. இதனால் வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கரூர் மாவட்டத்தில் புகளூர், வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், கட்டிபாளையம், தவுட்டுபாளையம், திருகாடுதுறை உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட ஊர்களில், குறிப்பாக காவிரி கரையோர பகுதிகளில் புகளூர் பாசன வாய்க்கால் மூலம் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்து வருகின்றனர். அந்த பகுதிகளில் வெற்றிலைக்காக தனி வாய்க்கால் வெட்டப்பட்டு தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதியில் விளைவதால் நீண்ட நாள் பசுமை நிறம் மாறாமல் இருக்கும்.

கடந்த சில மாதங்களாக வெற்றிலைக்கு கூடுதல் விலை கிடைக்காததால், வெற்றிலையை விவசாயிகள் உள்ளூர் பகுதிகளிலேயே பல்வேறு இடங்களில் விற்று வந்தனர். இந்நிலையில் திருமண சீஸன் உள்ளிட்ட சுபகாரியங்கள் துவங்கியுள்ள நிலையில் வெற்றிலைக்கு கடந்த ஒரு வாரமாக விலை அதிகரித்து வருகிறது.கற்பூர இளங்கால், கற்பூரகை, வெள்ளைக்கொடி கை ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறது. ஒரு கவுளி என்பது 102 வெற்றிலைகளையும், 20 கவுளி என்பது ஒரு கூடையையும், 26 கவுளிகள் என்பது ஒரு முட்டியும், 104 கவுளிகள் கொண்டது ஒரு சுமையாக விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் முதுகால் கற்பூர வெற்றிலை ஒரு கூடை 300 ரூபாய் முதல் 350 வரை விற்றது.

தற்போது ஒரு கூடை 380 ரூபாய் முதல் 400 ரூபாய் வரை தரத்துக்கு ஏற்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது இளங்கால் கற்பூரம் வெற்றிலைகள் புதியதாக அறுவடை செய்யப்பட்டு ஒரு கூடை 500 ரூபாய் முதல் 540 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இளங்கால் பச்சைக்கொடி கடந்த வாரம் ஒரு கூடை 3, 000 ரூபாயில் இருந்து தற்போது 5,000 முதல் 6, 000 ரூபாய் வரை விலை அதிகரித்து வருகிறது. இதனால் வேலாயுதம்பாளையம் பகுதியில் வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் மிகவும் மகிழச்சியில் அடைந்துள்ளனர்.

**கி.ராயபுரத்தில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,00:19 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் எள் பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நூற்றுக்கணக்கான மானாவரி நிலங்களில் ஆடிப்பட்டத்தில் விவசாயிகள் எண்ணை வித்து பயிரான எள் பயிரிட்டனர். ஆனால் கடந்த மாதம் எள் செடியில் பூச்சி தாக்குதல் ஏற்பட்டது. இதுகுறித்து "காலைக்கதிர்' நாளிதழில் செய்தி வெளியானது. இதையடுத்து கிருஷ்ணராயபுரம் பகுதியை சேர்ந்த விவசாய துறை அலுவலர்கள், விவசாயிகளை நேரிடையாக சந்தித்து பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த மருந்து தெளிப்பு முறை குறித்து ஆலோசனை வழங்கினர். இதனால் பூச்சி தாக்குதல் குறைந்து வருகிறது. இந்த நிலையில் கிருஷ்ணராயபுரம் பகுதிகளான பஞ்சப்பட்டி, சிவாயம், வயலூர், புனவாசிப்பட்டி, பழைய ஜெயங்கொண்டாம், லட்சுமணப்பட்டி மற்றும் சேங்கல் ஆகிய இடங்களில் கடந்த சில தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மானாவரி நிலங்களில் எள் பயிரிட்டுள்ள விவசாயிகள், கடந்தாண்டை விட நடப்பாண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

**அறுவடை செய்த நெல் மூட்டைகளை விற்க முடியாமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,00:35 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டியில் அறுவடை செய்யப்பட்ட குறுவை நெல் போதிய பணம் இல்லாததாலும், கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் வெளி இடங்களுக்கு அனுப்பப்படாததாலும், விவசாயிகள் கொண்டு வந்த நெல்லை கொள்முதல் நிலையங்களில் போட முடியாமல் தவித்து வருகின்றனர். நடப்பாண்டில் ஜூன் முதல் வாரத்தில் மேட்டூர் அணை

திறக்கப்பட்டு திருத்துறைப்பூண்டி பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் குறுவை சாகுபடி செய்யப்பட்டது. மழை இல்லாத காரணத்தால் விவசாயிகள் நெல் அறுவடை செய்து 42 நேரடி நெல் கொள் முதல் நிலையங்கள் மூலம் இதுவரை 18 ஆயிரம் டன்னுக்கு மேல் விளைச்சல் நெல்லை விற்பனை செய்துள்ளனர்.

தீபாவளி பண்டிகைக்கு முன் கொண்டு போய் வைக்கப்பட்ட நெல் மூட்டைகள், போதிய பணம் இல்லாத காரணத்தால் கொள்முதல் நடக்கவில்லை. மேலும், தொடர்ந்து மழை பெய்வதால் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் விளக்குடி, பள்ளங்கோவில், சுந்தரபுரி, கொக்கலாடி ஆகிய இடங்களில் உள்ள திறந்து வெளி சேமிப்பு கிடங்குகளுக்கு அனுப்பப்படாமல் உள்ளது. அரசு உடனடியாக தேங்கியுள்ள நெல் மூட்டைகளை எடுக்க கூடுதல் பணம் ஒதுக்கப்பட்டு ஈரப்பதத்தை அதிகரித்து நெல்லை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**திருத்திய நெல் சாகுபடி: அதிகரிக்க முடிவு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,21:45 IST

திண்டுக்கல் : மாவட்டத்தில் திருத்திய நெல் சாகுபடி முறையை அதிகரிக்க, விவசாயத்துறை முடிவு செய்துள்ளது.
கடந்த ஆட்சியில் இத்திட்டம், செம்மை நெல் சாகுபடி என, இருந்தது. பின் "ராஜராஜன் 1000' என, மாற்றம் செய்யப்பட்டது. இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் இதிலும் மாற்றம் செய்யப்பட்டு "திருத்திய நெல் சாகுபடி' என அறிவிக்கப்பட்டது. பெயர் மட்டும் மாறியதே தவிர, தொழில்நுட்பங்கள் மாறவில்லை. இம்மாவட்டத்தில் 23 எக்டேரில் நெல் சாகுபடி நடக்கிறது. இதில், 12 எக்டேர் திருத்திய நெல்சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பரப்பை மேலும் அதிகரிக்க விவசாயத் துறை முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதற்காக விவசாயிகளுக்கு, செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டு வருகிறது. இந்தபருவத்தில் கடந்த ஆண்டைவிட அதிக பரப்பில் திருத்திய நெல் சாகுபடி செய்ய, வேளாண் அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். திருத்திய நெல் சாகுபடி மூலம் பயிரை நோய் தாக்குதலில் இருந்து காக்கவும், அதிக மகசூல் பெறவும் முடியும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**வட்டியில்லா பயிர்க்கடன் திட்டத்திற்கு வரவேற்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,22:07 IST

தேனி : தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் பயிர்க்கடன் பெற்ற விவசாயிகள், குறித்த தவணைக்குள் கடனை திரும்ப செலுத்தினால், வட்டி முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்ற திட்டம், செயல்படுத்தப்படுகிறது. தவணை தவறி செலுத்தப்படும் கடன்களுக்கு மட்டும் வட்டி வசூலிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. 79 சதவீதம் விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனை தவணைக்காலத்திற்குள் செலுத்தி உள்ளனர். கடனை திரும்ப செலுத்திய விவசாயிகளுக்கு மறுபடியும் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**உர இருப்பு நிலவரம் தினமும் கண்காணிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,22:07 IST

தேனி : மாநிலம் முழுவதும் மழை தொடர்ந்து பெய்வதால் விவசாய பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன. இதனால் உரத் தேவை அதிகரித்துள்ளது. தொடக்க விவசாய கூட்டுறவு வங்கிகளிலும் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு சப்ளை செய்யப்படுகிறது. உரப்பற்றாக்குறை ஏற்படக்கூடாது என்பதில் அரசு கவனமாக உள்ளது.

தொடக்க விவசாய கூட்டுறவு சங்கங்களில் இருப்பு உள்ள உர விபரம், தினமும் சப்ளையாகும் உர விபரம், தினசரி தேவை குறித்து எஸ்.எம்.எஸ்., மூலம் "டான்பெட்' நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பு நிலவரம் கண்காணிக்கப்படுகிறது. தேவைப்படும் கூட்டுறவு சங்கங்களுக்கு உடனடியாக உரங்கள் சப்ளை செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ராஜபாளையம் வனப்பகுதியில் வரத்துவங்கிய வனவிலங்குகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2011,22:07 IST

ராஜபாளையம் : மேற்கு தொடர்ச்சி மலையில் மழை பெய்ய துவங்கியதால், ராஜபாளையம் வனப்பகுதிகளுக்குள் விலங்குகள் வரத் துவங்கியள்ளன. மழையின்மை காரணமாக ராஜபாளையம் நீர்காத்த அய்யனார் ஆறு வறண்டு காணப்பட்டது. ராஜபாளையம் வனப்பகுதியில் இருந்த யானை, சிறுத்தை, கரடி, மான், மிளா, காட்டு எருமைகள் என விலங்குகள்

இடம் பெயர்ந்தன. மலையடிவார பகுதியிலும் விலங்குகள் வராததால் விவசாயிகள் நிம்மதி அடைந்தனர். கடந்த வாரம் முதல் மழை பெய்ய துவங்கியது. நீர்காத்த அய்யனார்கோயில் ஆற்றிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இடம் பெயர்ந்த விலங்குகளும் இங்கு வர துவங்கி உள்ளன.இதை உறுதி செய்யும் விதமாக கடந்த வாரம் அய்யனார்கோயில் அருகே மிளாவை, சிறுத்தை விரட்டி சென்றதை அப்பகுதி மக்கள் பார்த்து உள்ளனர். இது போல் நேற்று முன்தினம் அதிகாலையில், மலையடிவாரத்தில் உள்ள ஒரு தோட்டத்திற்குள் காட்டு எருமைகள் வந்து சென்று உள்ளன. விலங்குகள் நடமாட்டம் உள்ளதால், கண்காணிப்பை அதிகரிக்க வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.